Registered as a Newspaper
பக்கங்கள் 12 | விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 23

செவ்வாய்க்கிழமை
19 டிசெம்பர் 2023

மார்கழி 03 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2054

முச்சந்தி முரளி



"வாழிடத்தையும் வாழ்வாதாரத்தையும் வெள்ளத்தால துலைச்ச சனங்களுக்கு உதவி செய்யவேண்டிய நேரம் இதுதான் கண்டியளோ"

## கொட்டும் பெருமழையால்
# பாய்கிறது வெள்ளம்; உயர்கிறது பாதிப்பு!

### வடக்கு மக்கள் அந்தரிப்பு!
### குடியிருப்புக்குள் புகுந்த முதலைகள்
### நூற்றுக்கணக்கான கால்நடைகள் சாவு!

**முல்லைத்தீவு, டிசெம்பர் 19**

**வங்காள விரிகுடாவில் தோன்றி இலங்கைக்குத் தாழ்வாக நகரும் காற்றுச் சுழற்சியால் வடக்கு மாகாணத்தில் உள்ள பெரும்பாலான பகுதிகள் வெள்ளப் பேரிடரை எதிர்கொண்டுள்ளன. நேற்றுமுழுவதும் தொடர்ந்த மழையால் பாய்ந்தோடிய வெள்ளப்பாதிப்பால் ஆயிரக்கணக் கானோர் தங்கள் வீடுகளைவிட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தற்காலிகமாகத் தங்கியுள்ளனர். இதனால் பெரும் அவலநிலை தோன் றியுள்ளது. பல பகுதிகளில் வெள்ளத்தின் தாக்கம் காரணமாக நூற்றுக் கணக்கான கால்நடைகளும் உயிரிழந்துள்ளன. வெள்ளத்துடன் சேர்ந்து முதலைகளும் வீடுகளுக்குள் புகுந்துள்ளதால் பொதுமக்கள் அதனாலும் பெரும் பாதிப்பை எதிர்கொள்ளவேண்டியுள்ளது.**

11

## நாயால் மாட்டிய கஞ்சாக்காரர்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 19
போதைப்பொருளை உடைமையில் வைத்துக்கொண்டு வீதியால் சென்ற இரண்டு இளைஞர்களை, பொலிஸ் மோப்பநாய்

11

## இளைஞர் ஒருவர் கஞ்சாவுடன் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 19
இளைஞர் ஒருவர் கஞ்சாவுடன் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

11

## பேசாலையில் 50 பவுண் அபேஸ்!

மன்னார், டிசெ. 19
மன்னார் பேசாலைப் பகுதியிலுள்ள வீடொன்றில், 50 பவுண் நகைகள் மற்றும் பெருந்தொகைப் பணம் என்பன நேற்றுத் திருடப்பட்டுள்ளன. பேசாலைப் பொலிஸாரிடம் இது தொடர்பில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

11

## யாழ். நகரத்தில் அதிகளவு மழை

யாழ்ப்பாணம், டிசெ. 19
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த இரண்டு நாள்களாக மழையுடனான காலநிலை நீடிக்கும் நிலையில், யாழ்ப்பாணம் நகரப்பகுதியிலேயே கூடியளவு மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

11

## இன்றிரவு முதல் மழை குறையும்!

யாழ்ப்பாணம், டிசெ. 19
வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் உட்பட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளில் நிலவும் கடும் மழையுடனான காலநிலை, இன்றிரவு முதல் நீங்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.
நாடெங்கிலும் கிடைத்து வருகின்ற கனமழைக்கான பிரதான காரணம், வங்காள விரிகுடாவில்

11

## குடும்பப்பெண் சடலமாக மீட்பு!

பளை, டிசெ. 19
பளை - இந்திராபுரம் பகுதியில், குடும்பப்பெண்ணொருவர் கிணற்றுக்குள் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். ஞானசீலன் காயத்திரி (வயது-52) என்ற பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

11

## வெள்ளப்பேரிடர் நிலை; போக்குவரத்து முடக்கம்



முல்லைத்தீவு, டிசெ. 19
முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சியில், வெள்ளநீர் வீதிகளை மேவிப் பாய்வதால் பல இடங்களில் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.
புதுக்குடியிருப்பு - பரந்தன் வீதியில் மட்டும் மூன்று இடங்களில் வெள்ள நீர் வீதியை மேவியதால் போக்குவரத்துத் துண்டிக்கப்பட்டுள்ளது. இதைவிட முல்லைத்தீவில் பல இடங்களிலும் இந்த இடர்நிலை ஏற்பட்டுள்ளது. கேப்பாப்பிலவில் இருந்து

11

## இந்திய மீனவர்கள் விளக்கமறியலில்!

யாழ்ப்பாணம், டிசெ. 19
எல்லை தாண்டிய மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில், யாழ்ப்பாணம் - காரைநகர், கோவளம் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 14 பேர் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்ட நிலையில், அவர்கள் அனைவரும் விளக்கமறியலில்

11

## மத்தியின் அதிகாரங்கள் பகிரப்படுதல் வேண்டும்!
### மனோ எம்.பி. சுட்டிக்காட்டு



கொழும்பு, டிசெ. 19
மாகாணசபை முறைமையென்பது வடக்கு-கிழக்குக்கு மட்டும் அல்ல. 9 மாகாணங்களுக்கும் உரித்தானது. மத்தியில் குவிந்து கிடக்கும் அதிகாரங்கள் மாகாணத்துக்குப்

11

# மஹிந்தவின் அலுமாரியில் எலும்புக்கூடுகள்!
### ...ய மக்கள் சக்தி குற்றச்சாட்டு



கொழும்பு, டிசெ. 19
தமது கரங்களில் இரத்தக்கறை படியவில்லை என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச கூறுகின்றார். ஆனால் அவரது ஆட்சிகாலத்தில்தான் கொலைகள் அரங்கேறின. கையில் வேண்டுமானால் இரத்தக்கறை இல்லாமல் இருக்கலாம். ஆனால், அலுமாரியில் நிச்சயம் எலும்புக்கூடுகள் இருக்கும் - என்று [illegible] மக்கள் சக்தி சாடியுள்ளது.

11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திகள்

# பாதாள உலகக் குழுக்களை ஒழிக்கும் திட்டங்கள் தீவிரம்

## பதில் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 19

**பாதாள உலகக் குழுக்களை ஒழிக்கும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என்று பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.**

இந்த நடவடிக்கைக்காக 43 பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இன்னும் சில மாதங்களில் பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகளை நிறுத்துவோம். எதிர்வரும் ஜனவரி மாதத்தின் பின்னர் பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்புடைய ஆயிரத்து 19 பேர் விமானநிலையத்துக்குச் செல்லமுடியாத நிலைமை உருவாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# சர்ச்சைகளை ஏற்படுத்தும் தென்னக்கோன் நியமனம்

கொழும்பு,டிசெ. 19

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் பதில் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டமை தொடர்பாக இலங்கைச் சட்டத்தரணிகளின் கூட்டமைப்பு அதிருப்தி வெளியிட்டுள்ளது.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் மீது பல வழக்குகள் நிலுவையில் உள்ள நிலையில், அவரது நியமனம் அதிருப்தியளிக்கின்றது என்று அந்தக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

முன்னாள் இராணுவச் சிப்பாய் ஒருவரைச் சித்திரவதை செய்தார் என்று அவர் மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்கு உயர் நீதிமன்றில் நிலுவையில் உள்ளது என்றும் அந்தக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியிருக்கின்றது.

அவ்வாறிருக்க தேசபந்து தென்னக்கோனுக்கு நியமனம் வழங்க அரசமைப்புப் பேரவை எவ்வாறு அனுமதி வழங்கியது என்று இலங்கைச் சங்கத்தின் முன்னாள் தலைவர் உபுல் ஜயசூரிய கேள்வி எழுப்பியுள்ளார்.

வழக்குகள் நிலுவையில் உள்ள தன் காரணமாக தேசபந்து தென்னக்கோன் மீது மக்களுக்கு நம்பிக்கை இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-இ)

# பிறப்பு வீதம் வீழ்ச்சி

கொழும்பு, டிசெ.19

கடந்த 10 ஆண்டுகளில் இலங்கையின் பிறப்பு வீதம் சுமார் 25 வீதத்தால் குறைந்துள்ளது என்று சனத்தொகை மற்றும் புள்ளி விவரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியே இந்த நிலைமைக்குப் பிரதான காரணம் என்று கூறப்படுகின்றது.

2013ஆம் ஆண்டு பிறந்தவர்களின் எண்ணிக்கை 3 இலட்சத்து 65 ஆயிரத்து 762 ஆகக் காணப்படுகின்றது. 2022ஆம் ஆண்டு இந்த எண்ணிக்கை 2 இலட்சத்து 75 ஆயிரத்து 321 ஆகக் காணப்பட்டது. 2021 ஆம் ஆண்டு இந்த எண்ணிக்கை 2இலட்சத்து 84 ஆயிரத்து 48 ஆகக் காணப்படுகின்றது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது. அதற்கேற்ற வருமானம் இல்லாத நிலையில் மக்கள் நாளாந்த வாழ்க்கையைக் கொண்டு செல்வதில் நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றனர். (எ-இ)

# பருத்தித்துறை மருத்துவமனையில் ஆணுறை இயந்திரம் மாயம்!

யாழ்ப்பாணம், டிசெ. 19

பருத்தித்துறை ஆதார மருத்துவமனை வளாகத்தில் பொருத்தப்பட்டிருந்த ஆணுறை வழங்கும் இயந்திரம் மாயமாகியுள்ளது என்று மருத்துவமனைத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் எய்ட்ஸ் தொற்று அதிகரித்து வரும் நிலையில், அதனைக் கட்டுப்படுத்தும் வகையில் பொது இடங்களில் ஆணுறை விற்பனை இயந்திரங்கள் ஊடாக ஆணுறைகளை வழங்கும் திட்டம் அண்மையில் நாடளாவிய ரீதியாகத் தொடங்கப்பட்டிருந்தது.

அதற்கமைவாக பருத்தித்துறை ஆதார மருத்துவமனை வளாகத்தில், வெளிநோயாளர்களுடன் வருபவர்கள் தங்கியிருப்பதற்காக அமைக்கப்படுள்ள கொட்டகைப் பகுதியிலும் தானியங்கி ஆணுறை இயந்திரம் ஒன்று பொருத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்பாக குறித்த தானியங்கி ஆணுறை இயந்திரம் மாயமாகியுள்ளமை தெரியவந்துள்ளது. (அ-ம-100)

# கொரோனாத்தொற்று இலங்கை அவதானம்

இந்தியா, கேரளாவில் கொரோனா வைரஸின் புதிய திரிபு வேகமாகப் பரவும் நிலையில், அது தொடர்பில் எச்சரிக்கையாக உள்ளோம் என்று இலங்கையின் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

48 மணித்தியாலங்களுக்கு மேல் காய்ச்சல் உட்பட நோய் அறிகுறிகள் தென்பட்டால் மக்கள் மருத்துவ உதவியை நாடவேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-இ)

# பதவி விலகினார் மில்கோ தலைவர்



கொழும்பு, டிசெ.19

மில்கோ நிறுவனத்தின் தலைவர் ரேணுக பெரேரா பதவி விலகியுள்ளார்.

தனது பதவி விலகல் கடிதத்தை அவர் நிதிய மைச்சுக்கு அனுப்பியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

# துப்பாக்கிச் சூடு



கொழும்பு, டிசெ.19

கிரிபத்கொட, காலா சந்திப் பகுதியில் உள்ள இரவு விடுதி ஒன்றில் நேற்று அதிகாலை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடந்துள்ளது. துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் தெரியவரவில்லை. (எ-இ)

# கஞ்சா மீட்பு

கொழும்பு, டிசெ.19

மட்டக்களப்பு, காத்தான்குடியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சுமார் 4 கிலோ கேரளக் கஞ்சாவும், ஒரு தொகை ஹெரோயினும் கைப்பற்றப்பட்டுள்ளன. இது தொடர்பில் பொலிஸ் முன்னாள் உத்தியோகத்தர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். (எ-இ)

## குற்றங்கள்

# பெண் கைது

கண்டி, மஹியங்கனை வீதியில் மதுபோதையில் முச்சக்கரவண்டியைச் செலுத்திச்சென்ற பெண் ஒருவர் தெல்தெனிய போக்குவரத்துப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர் கண்டி - தெல்தெனியபிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதுடையவர் என்றும், அவர் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

# 2,121 பேர் கைது

கொழும்பு, டிசெ.19

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட திடீர் சுற்றிவளைப்புகளில் 24 மணி நேரத்தில் 2 ஆயிரத்து 121 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர்களில் 101 பெண்களும் உள்ளடங்குகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர்களில் 133 பேர் மறுவாழ்வு மையங்களுக்கு அனுப்பப்படுவர் என்றும், ஏனையோர் சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

# போதை மாத்திரை சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 19

போதை மாத்திரைகளுடன் 4 பேர் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் கூறுகின்றனர். நேற்றுமுன்தினம்ஞாயிற்றுக்கிழமை இந்தக் கைது முன்னெடுக்கப்பட்டுள்ளது. கந்தர்மடத்தில் வைத்து 8 உயிர்கொல்லி போதை மாத்திரைகளுடன் இளைஞன் ஒருவரையும், குருநகர்ப் பகுதியில் 8 உயிர்கொல்லி போதை மாத்திரைகளுடன் இளைஞன் ஒருவரையும், 3 உயிர்கொல்லி போதை மாத்திரைகளுடன் மற்றொரு இளைஞனையும், சென். பற்றிக்ஸ் வீதியில்3உயிர்கொல்லிபோதை மாத்திரைகளுடன் இளைஞன் ஒருவரையும் யாழ்ப்பாணப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஒ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழுத்தம் கொடுக்க எங்களால் இயலாது

## வெளிநாட்டு இராஜதந்திரிகள் கைவிரிப்பு

**கொழும்பு, டிசெ.19**

**உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறையை உருவாக்கும் முயற்சியில் நாம் அரசாங்கத்துக்கோ பாதிக்கப்பட்ட தரப்பினருக்கோ அல்லது அதன் பிரதிநிதிகளுக்கோ அழுத்தங்களைப் பிரயோகிக்கமுடியாது என்று ஜப்பான், தென்னாபிரிக்கா, சுவிட்சர்லாந்து இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர்.**

யாழ்ப்பாணத்தில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நடத்திய சந்திப்பிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் நல்லிணக்க முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறையை உருவாக்குவதற்கான ஒத்துழைப்புகளை வழங்கவுள்ளோம். எமக்குக் காணப்படுகின்ற முன் அனுபவங்கள், விசேடமாக நிலைமைகளைக் கையாண்ட சூழல்கள் ஆகியவற்றை நாம் பகிர்ந்து கொள்வதற்குத்தயாராகவுள்ளோம்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறிப்பிடப்பட்ட சில விடயங்களுக்கு அரசமைப்பு மாற்றத்தை மேற்கொள்ளவேண்டியுள்ளது. அது உள்நாட்டில் முன்னெடுக்கப்பட வேண்டிய விடயமாகும். அதில் நாம் தலையீடுகளைச் செய்யப் போவதில்லை என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். (எ-இ)

## வெளிநாட்டு நிறுவனங்களுக்கு சொந்த எரிபொருள் குதங்கள்!

கொழும்பு, டிசெ. 19

அமெரிக்கா, அவுஸ்திரேலிய எரிபொருள் விற்பனை நிறுவனங்கள் சொந்தமாக தமக்கென தனியான எரிபொருள் குதங்களை அமைக்க வேண்டும் என இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் ஆர்.எம்.பார்க்ஸ் நிறுவனமும் அவுஸ்திரேலியாவின் யுனைற்ரெட் பெற்றோலிய நிறுவனமும் இலங்கையில் எரிபொருள் விற்பனையை ஆரம்பிக்கவுள்ள நிலையில் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

தற்போது சீனாவின் சினோபெக் நிறுவனம் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் சேமிப்புக் குதங்களைப் பயன்படுத்தி வருகிறது. ஐ.ஓ.சி. நிறுவனம் திருகோணமலையிலுள்ள எண்ணெய்க் குதங்களைப் பயன்படுத்தி வருகிறது. இவ்வாறானதொரு நிலையிலேயே மேற்படி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. (ஒ-6)

## விமானிகளை உருவாக்க கூட்டு நிகழ்ச்சித் திட்டம்

கொழும்பு, டிசெ, 19

எதிர்காலத்தில் விமானிகள், தொழில்நுட்பவியலாளர்கள், விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர்களை உருவாக்குவதற்கு ஏதுவாகப் பாடசாலை மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சிவில் விமான போக்குவரத்துச் சேவை நிறுவனமும், ரூபவாஹினி கூட்டுத்தாபனமும் இணைந்து நடவடிக்கை எடுக்கவுள்ளன.

பாடசாலை மாணவர்களுக்கு விமான, கடல்சார் தொழில் வாய்ப்புகள் பற்றி அறிவூட்டி எதிர்காலத்தில் அவர்களை இந்தத் துறைகளுக்கு இணைத்துக்கொள்வதே இதன் நோக்கமாகும் என்று ஊடகத்துறை அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ஒ-6)

## பாகிஸ்தான் வெங்காயம் இறக்குமதி?

*பாகிஸ்தானில் இருந்து பெரிய வெங்காயத்தை இறக்குமதி செய்வது தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.*

*பெரிய வெங்காயத்தின் விலையைச் சந்தையில் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

*இந்தியா தற்போது வெங்காய ஏற்றுமதிக்குத் தடை விதித்துள்ளதால், இலங்கையில் பெரிய வெங்காயத்தின் விலை உயர்ந்துள்ளது.*

*(எ-இ-6)*

## 1,183 நிறுவனங்களை ஏலம் விடும் வங்கிகள்

கொழும்பு, டிசெ. 19

இந்த ஆண்டு ஜனவரி முதல் நவம்பர் வரையிலான காலத்தில் ஆயிரத்து 183 சிறிய மற்றும் நடுத்தர வணிக நிறுவனங்கள் வங்கிகளால் ஏல விற்பனை செய்யப்பட்டுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

'வங்கிகளின் அதிகரித்த வட்டி வீதம் அரசாங்கத்தின் தவறான தீர்மானங்கள் போன்ற காரணங்களாலேயே இந்த நிறுவனங்கள் ஏலத்தில் விற்பனை செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. வங்கிகளில் கடன் பெற்று வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்தவர்கள் இன்று பெருமளவு கடன் சுமையை எதிர்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்' என்றும் குறிப்பிட்டார். (ஒ-6)

## இறக்குமதி முட்டைகள் சந்தைக்கு

கொழும்பு, டிசெ.19


இறக்குமதி செய்யப்பட்ட 10 மில்லியன் முட்டைகளைச் சந்தைக்கு விநியோகிக்கும் நடவடிக்கைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் அனுமதியுடன் இந்த முட்டைகள் சதொச நிறுவனத்துக்கு விநியோகிக்கப்பட உள்ளன என்று இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.




**பேய்மாதிரி மழை முல்லைத்தீவு, கிளிநொச்சிப் பக்கம் கொட்டிக் கொண்டிருக்குது. கன இடங்களில றோட்டால போய்வரவே முடியாதளவுக்கு வெள்ளம் கரைபுரண்டோடுது. கொஞ்சம் பிசகினாலும் வெள்ளம் இழுத்துக்கொண்டு போடும். றோட்டிலையே இப்பிடி எண்டால், சனங்களின்ர குடிமனையளை வெள்ளம் சும்மா விடுமோ? வீடுகளுக்குள்ள வெள்ளம் வரத் தொடங்கினதால, சனங்கள் இடம்பெயர்ந்து பள்ளிக்கூடங்களில போய் இருக்குதுகள். அவசரத்தில வந்த சனங்கள் எல்லாச் சாமான்களையும் எடுத்துக்கொண்டு வர ஏலாதுதானே. கையில ஏப்பிட்ட சாமான்களோட அவையள் வந்திருக்கினம். இப்பிடி இடம்பெயர்ந்தவைக்கு சமைச்ச சாப்பாட்டை அந்தந்தப் பிரதேச செயலகக்காரர் குடுக்கினம். ஆனால் மிச்சத்தேவையளை அவை எங்க வாங்க ஏலும்? வெள்ளத்தால இடம்பெயர்ந்தவையில கனபேர் அன்றாடம் தொழில் செய்துதான் குடும்பத்தைப் பாக்கிறவை. இப்ப தொழிலும் இல்லையெண்டதால, தேவையான சாமான்களை வாங்க அவையிட்ட கையில காசும் இல்லை. இப்படியான நிலையில ஆரும் அவைக்கு என்னென்ன தேவை எண்டு அறிஞ்சு, உதவி செய்தால் பெரும் புண்ணியமா இருக்கும். ஏற்கனவே சிலர் நிவாரண வேலையில இறங்கிட்டினம். இன்னும் மழை பெய்யிறதால, பாதிப்புகள் கூடுமெண்டதால 'உதவி செய்ய விரும்பிற எல்லாரும் தங்களால முடிஞ்ச உதவியளைச் செய்யுங்கோ' எண்டு அந்தச் சனங்கள் கோரிக்கை விட்டிருக்கினம்.**

**இப்பிடி அவையின்ர கோரிக்கை வந்தபிறகு கன இளந்தாரிப் பெடியள் மோட்டர் சைக்கிள்களில இந்த மழைக்குள்ளையும் வெள்ளம் பாயுற இடங்களுக்கு படையெடுக்கத் தொடங்கியிருக்கினமாம். அப்பிடிப் படையெடுத்தவை பாதிக்கப்பட்ட சனத்துக்கு தேவையான சாமான்களை அள்ளிக்குடுத்திருப்பினம் எண்டுதானே நினைக்கிறியள். அதுதான் இல்லை. எங்கையெல்லாம் வெள்ளம் புகுந்திருக்கோ, எந்த றோட்டெல்லாம் வெள்ளக்காடா மாறியிருக்கோ அங்கையெல்லாம் போய் நிண்டுகொண்டு, தங்கட போனை எடுத்து 'ரிக்ரொக்'வீடியோ எடுத்து கொஞ்சப்பேர் விளையாடுகினம். இன்னொரு பக்கம் யூரியுப் நடத்திறவை 'வெள்ளம் எப்பிடி வந்தது? எங்க போகுது? வெள்ளம் வரேக்க எப்பிடி பீல் பண்ணினீங்கள்? வெள்ளம் வந்ததுக்கு என்ன காரணம் எண்டு நினைக்கிறியள்?' எண்டு பாதிக்கப்பட்ட சனத்திட்ட விண்ணானம் கேட்டுக்கொண்டிருக்கினம். 'இடுக்கண் வருங்கால் நகுக' (துன்பம் வரேக்க சிரியுங்கோ) எண்டு வள்ளுவர் சொன்னதை இவையள் பிழையா விளங்கிட்டினம்போல. அதாலதான் சனங்கள் வெள்ளத்துக்க தோய்ஞ்சு பாய்ஞ்சடிச்சு பதறி ஓடி வரேக்கையும், அவையை மறிச்சு 'வெள்ளம் என்ன கலரில பாயுது?' எண்டமாதிரியான விசர்க்கேள்வியளைக் கேட்டு '.'.ப்ன்'எடுத்துக் கொண்டிருக்கினம். 'உதவி செய்ய வந்த ஆக்களை விடவும் இப்பிடி ரிக்ரொக், யூரியுப் செய்ய வந்தவைதான் கூட' எண்டு அந்தச் சனங்களே வெறுத்துப்போய்ச் சொல்லுதுகள்.**

**கொஞ்சமெண்டாலும் மனச்சாட்சியோட நடக்க எல்லாரும் பழகிக் கொள்ளவேணும். உங்கட ரிக்ரொக், யூரியுப்புக்கு வீடியோ தேவையெண்டதுக்காக, பதகளிச்சுப் போய், வெள்ளத்தின்ர ஈரம் கூடக் காயாமல் நிக்கிற சனத்திட்ட கொண்டு போய் மைக்கை நீட்டுறதும், வெள்ளதுக்க நிண்டு 'அடடா மழைடா அடைமழைடா' எண்ட மாதிரியான பாட்டுகளை போட்டு ரிக்ரொக் செய்யிறதும் அவ்வளவு நல்லதில்லைக் கண்டியளோ.**



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர்ப் பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன்புரி சங்கம் நடத்திய ஒளிவிழா 2023 நிகழ்வு கடந்த சனிக்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. (ஒ-66)

## பெருந்தோட்ட நிறுவனங்களை எச்சரிக்கும் தொண்டமான்!

கொழும்பு, டிசெ.19

தோட்டத்தொழிலாளர்களைத் தரக்குறைவாக நடத்தும் பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தனது ருவிற்றர் தளத்தில் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

"தோட்டத்தொழிலாளர்கள் சிலர் நிலத்தில் அமர்ந்து உணவருந்தும் காணொலி சமூக ஊடகங்களில் வெளியாகியிருந்தது. நான் தோட்டத்தொழிலாளர்களுக்கு உணவருந்தும் அறைகளையும் கழிப்பறைகளையும் கட்டிக்கொடுக்க முற்பட்டபோது பெருந்தோட்ட நிறுவனங்கள் எதுவிதப் பங்களிப்பும் செய்யவில்லை. இந்த நிலை நீடித்தால் அரசாங்கம் கழிப்பறைகளையும் அடிப்படை வசதிகளையும் பெருமெடுப்பில் ஏற்படுத்திக்கொடுக்கும்.

பெரிய நிறுவனங்களுக்கு அரசாங்க நிதியில் கழிப்பறைகளைக் கட்டிக்கொடுக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. தேயிலைத் தோட்டங்களில் தொழிலாளர்களுக்கு வழங்கும் வேலை நிலைமைகள் மற்றும் வசதிகள் குறித்து அனைத்து முதலாளிகளும் பொறுப்புக்கூறும் வகையில் அரசாங்கம் தனது வேலைவாய்ப்புச் சட்டங்களைப் புதுப்பித்து வருகிறது. தற்போது நடைமுறையிலுள்ள குத்தகை பல தசாப்தங்களுக்கு முன்னர் வழங்கப்பட்டது. இது பெருந்தோட்ட நிறுவனங்களைக் குட்டி இராஜாங்கமாக மாற்றியுள்ளது" என்றும் பதிவிட்டுள்ளார். (ஒ-6)

# சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கையை நிறுத்துவோம்

### கனடா கென்சர்வேட்டிவ் கட்சி அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 19

**கனடாவில் கென்சர்வேட்டிவ் கட்சி ஆட்சியமைத்தால் சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக நாங்கள் கனடாவின் வெளிவிவகார அமைச்சின் சட்டத்தரணிகளைப் பயன்படுத்துவோம் என்று கட்சியின் தலைவர் பியர் பொலியர் தெரிவித்துள்ளார்.**

கனடா ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

1980ஆம் ஆண்டுகளில் கனடாவுக்குப் பெருமளவு புலம்பெயர்ந்த தமிழர்களை முதலில் வரவேற்றவர் கென்சவேர்ட்டிவ் கட்சியின் அப்போதைய பிரதமர் பிரையன் முல்ரோனி.

இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக முதலில் சர்வதேச தடைகளை விதித்தது கொழும்பில் இடம்பெற்ற பொதுநலவாய உச்சி மாநாட்டில் கலந்துகொள்ளாமல் வெளியேறி மஹிந்த ராஜபக்ச அரசாங்கத்தை அவமானப்படுத்தியது பிரதமர் ஹார்ப்பர் அரசாங்கமே.

இலங்கையில் இனப்படுகொலையில் ஈடுபட்ட அரசாங்க உறுப்பினர்களுக்கு எதிராக மக்னிட்ஸ்கி தடைகளை விதிப்பதே தற்போதுள்ள திட்டம். அதன் மூலம் சர்வதே தடைகள் ஊடாக அவர்களது தனி பட்ட நிதிகளை முடக்கலாம். தமிழ களுக்கு எதிராகத் தொடரும் இன படுகொலை நடவடிக்கைகளுக்கா இலங்கைஅரசாங்கத்தைதொடர் கண்டிப்போம். தனிமைப்படுத் வோம்- என்றார். (எ- )

## கத்தரிக்காய் களவாடியவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 19

பெருந்தொகையான கத்தரிக்காய்களைத் திருடிய சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கடந்த 8ஆம் திகதி கோப்பாய் மத்தி பகுதியில் 300 கிலோகிராம் வரையான கத்திரிக்காய் தோட்டத்தில் திருட்டுப்போனதாகப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்நிலையில் திருநெல்வேலி, பால்பண்ணைப் பகுதியில் 20 வயதான சந்தேகநபர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார். (ஒ-26)

## சர்வதேச அங்கீகாரம் பெற் இலங்கைச் சுகாதாரச்சேவை

கொழும்பு, டிசெ.19

இலங்கையின் இலவச சுகாதாரச்சேவை சர்வதே அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது என்று 'யுனிசெப்' அமைப்பு தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தின் (யுனிசெப்) இலங்கைக்கான பிரதிநிதி கிளிஸ்டியன் ஸ்கூக் சுகாதார அமைச்சின் செயலாளர் விசேட மருத்துவர் பாலித மஹிபாலவை அண்மையில் சந்தித்தபோது இதைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சுகாதாரத்துறை டன் தொடர்புடைய 'யுனிசெப்' அமைப்பின் தற்போதைய மற்றும் எதிர்காலத்திட்டங்கள் தொடர்பாகவும் இந்தச் சந்திப்பில் சுகாதார அமைச்சின் செயல ளருக்குத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (எ-இ)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் கூடுதல் கவனம் தேவை. ஆரோக்கியத்திலும் அக்கறை அவசியம். உறவினர்கள் உதவி கேட்டு வருவார்கள். தாய்மாமன் வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிக்கு ஆதரவு கிடைக்கும்.

**இடபம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். செயல்கள் எதிர்பார்த்தபடி நிறைவேறும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். உடல் நலனில் கவனம் தேவை. தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர் பணவரவு ஏற்பட வாய்ப்பு உண்டு. சகோதர வகையில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கடகம்:** தொடங்கும் காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமாகும். உறவுகளால் செலவுகள் ஏற்படும். ஆதாயம் கிடைக்கும். உறவினர்களால் செலவுகளுக்கு வாய்ப்பு உள்ளது.

**சிம்மம்:** தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். பிள்ளைகளை புதிய பாதையில் வழிநடத்துவீர்கள். உங்களை நம்பி பெரிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள்.

**கன்னி:** புதிய முயற்சிகளை மேற்கொள்ளும்போது உரிய கவனம் தேவை. வழக்கமான பணிகளிலும் எச்சரிக்கை அவசியம். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**துலாம்:** பொறுமையுடன் செயற்பட வேண்டிய நாள். எதிர்பாராத செலவுகள் ஏற்படலாம். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளுக்காக பாடுபட வேண்டி இருக்கும். வியாபாரம் எதிர்பார்த்தபடியே நடக்கும்.


**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்களில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். உறவுகளால் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உள்ளது. எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். மறைமுக எதிர்ப்பு நீங்கும்.

**தனுசு:** சுறுசுறுப்பாகவும் பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். குடும்பம் தொடர்பான பிரச்சினை ஒன்றில் வாழ்க்கைத் துணை உங்களுடைய ஆலோசனையைக் கேட்டு வருவார். பிள்ளைகளால் பெருமை உண்டாகும்.

**மகரம்:** செயல்கள் அனுகூலமாகும் நல்ல நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும். சங்கடங்கள் ஏற்படும்.

**கும்பம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். ஆதாயம் கிடைக்கும். இலாபம் அதிகரிக்கும்.

**மீனம்:** சோர்வு நிறைந்திருக்கும். புதிய முயற்சிகளை தொடங்குவது நல்லது. தேவையைப் பூர்த்தி செய்வீர்கள். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவு கிடைக்கும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.



படம்: ஐ.சிவசா ன்

## கொடியேற்றம்

யாழ்ப்பாணம், டிசெ.19

நல்லூர் சிவன்கோவில் என அழைக்கப்படும் சிறி கமலாம்பிகா சமேத சிறி கைலாசநாத சுவாமி தேவஸ்தானப் பெருந்திருவிழா நேற்றுக் காலை 7 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. எதிர்வரும் 27ஆம் திகதி புதன்கிழமை காலை 7 மணிக்கு தேர்த்திருவிழாவும், 28ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ஒ-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


## பேரிடரும் இருட்டடிப்பும்

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்கள் கடும் மழையால் பாதிக்கப்பட்டுள்ளன. அந்தப் பகுதி மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். அவர்களது வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது. இந்தப் பேரிடரால் அவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். மழை தொடர்ந்தும் பெய்து கொண்டிருப்பதால் பாதிப்புகள் இன்னமும் அதிகமாகக் கூடும் என்றும், யாழ்ப்பாணத்திலும் வெள்ளப்பாதிப்பு ஏற்படலாமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு மாகாணத்தின் நிலப்பரப்பு ஈரமாகியுள்ளதால் 10 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி கிடைத்தாலே வெள்ளப் பாதிப்பு ஏற்படும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதே வேளை இன்னமும் இரண்டு காற்றுச் சுழற்சிகள் ஏற்படும் வாய்ப்பு இருக்கின்றது எனவும் எதிர்வுகூறப்படுகின்றது. வெள்ளப் பேரிடர் ஏற்படப்போவது நிச்சயம். தற்போதைய நிலையில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களிலுள்ள குளங்கள் தங்கள் கொள்ளளவை எட்டிவிட்டன. அவை வான் பாயவும் தொடங்கியுள்ளன. இதனால் தாழ்நிலப் பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் ஏற்கனவே இடம்பெயர்ந்துள்ளனர். மழை தொடருமாக இருந்தால், குளங்கள் உடைப்பு எடுப்பதற்கான வாய்ப்புகளும் இருக்கின்றன. அது இன்னமும் பாதிப்புகளை அதிகமாக ஏற்படுத்தும். எனவே பேரிடரை எதிர்கொள்வதற்குரிய ஆயத்தங்களுடன் இருக்க வேண்டிய இக்கட்டான நிலை தோன்றியுள்ளது.

மக்களைப் பாதுகாப்பான இடத்தில் தங்கவைப்பது, அவர்களுக்குத் தேவையான சமைத்த உணவை வழங்குவது உள்ளிட்ட விடயங்கள் உடனடியாக முன்னெடுக்கப்பட வேண்டும். இதற்குரிய தயார்ப்படுத்தல்களை வெறுமனே அரச அதிகாரிகள் முன்னெடுப்பார்கள் என்று பார்த்துக்கொண்டிருக்காமல், இளையோர் முன்வந்து அதைச் செய்யவேண்டும். வெள்ளப் பேரிடரை எதிர்கொள்ள ஆயத்தமாகும் அதே நேரத்தில், வெள்ளப் பேரிடர் தணிந்த பின்னர் ஏற்படக்கூடிய சுகாதாரச் சீர்கேட்டு நிலைமை உள்ளிட்ட அனைத்து விடயங்கள் தொடர்பிலும் இப்போதே திட்டமிடல் தேவை. டெங்குப் பாதிப்பு அதிகமாகி வரும் சூழலில், நிச்சயமாக வெள்ளம் வடிந்தோடிய பின்னர் நுளம்புப் பெருக்கம் அசாதாரணமாக அதிகரிக்கத்தான்போகின்றது. ஏற்கனவே டெங்குக் கட்டுப்பாட்டுக்கு மருந்துகள் இல்லாத நிலையில், இது இன்னமும் பாதிப்பை ஏற்படுத்தப் போகின்றது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, வெள்ளப் பேரிடரை வடக்கு மாகாணம் எதிர்கொண்டுள்ள நிலையில் அரசாங்கம் அதற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அதிலும், வடக்கு மாகாணத்தின் வெள்ளப் பேரிடர் தொடர்பான தகவல்கள் இடர்முகாமைத்துவ மத்திய நிலையத்தின் தேசியரீதியான அறிக்கையிடலில் இருட்டடிப்புச் செய்யப்படுகின்றன. பேரிடரை வடக்கு மாகாணம் எதிர்கொண்டுள்ள நிலையில் மக்களுக்கான உதவிகள் உடனடியாக கிடைக்கவேண்டிய சூழலில் தகவல்களை இருட்டடிப்புச் செய்வதானது பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். வடக்கின் ஒவ்வொரு மாவட்டத்தினதும் இடர்முகாமைத்துவப் பிரிவு வெளியிடும் பாதிப்பு விவரங்களுக்கும், தேசிய தகவல் திரட்டில் உள்ள விவரங்களுக்கும் இடையில் மிகப் பெரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. இது பாதிப்புக்குள்ளான மக்களுக்குக் கிடைக்க வேண்டிய உதவிகளிலும் பாதிப்பை ஏற்படுத்தும். அதிகாரிகளின் தவறால் இது நிகழ்ந்ததா அல்லது திட்டமிட்டு இருட்டடிப்புச் செய்யப்பட்டதா என்பதும் கண்டறியப்பட வேண்டும். இறுதிப்போரின்போதும் அங்கே பல இலட்சம் மக்கள் முற்றுகைக்குள் இருந்த நிலையில் அந்த எண்ணிக்கையை அரசாங்கம் குறைத்துக் காண்பித்தது. உணவு, மருந்து உள்ளிட்ட பொருள்களையும் குறைத்தே அனுப்பியது. இதனால் மக்கள் எதிர்கொண்ட பேரவலம் என்பது சாதாரணமானதல்ல. எனவே, தற்போதைய வெள்ளப்பேரிடர் தொடர்பான தகவல்கள் இருட்டடிப்புச் செய்யப்படுவதை சாதாரணமாகக் கடந்து செல்லவும் முடியாது.




# மீண்டும் தட்டுப்பாடு

**கொழும்பு, டிசெ. 19**

**புற்றுநோய், நீரிழிவு, இருதய நோய், தோல் நோய் போன்ற நோய்களுக்குரிய மருந்துகளுக்கு அரசாங்க மருந்து வழங்கல் பிரிவில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

"அரசாங்க மருந்து வழங்கல் பிரிவில் மருந்துகள் சேமித்து வைக்கப்படுவதில்லை. சில மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது உண்மை. தற்போது நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றுக்கொண்டிருப்பதால் மருந்துக் கொள்வனவு மற்றும் விநியோகம் என்பவற்றில் சற்றுத் தாமதம் ஏற்பட்டுள்ளது. இந்தியாவுடனும் பங்களாதேஷுடனும் மருந்துகளைக் கொள்வனவு செய்வது பற்றிப் பேச்சு நடத்தி வருகிறோம். இறுதி செய்யப்பட்டதும் சில அத்தியாவசிய மருந்து வகைகள் வந்து சேரும்'' என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்த்தன குறிப்பிட்டார்.
சுகாதாரத் தொழிற்சங்கங்களின் தலைவர் ரவி குமுதேஷ் "அரசாங்க மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை உரிய காலப்பகுதியில் அனுமதி வழங்காமையே மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டமைக்கானகாரணம்"எனத்தெரிவித்தார். (ஒ-6)

# வீணடிக்கப்படும் ஈ.பி.எப். இருப்பு!

ஊழியர் சேமலாப நிதிய அங்கத்தவர்களின் அடையாள அட்டை அச்சிடுவதற்கும், ஊழியர் சேமலாப நிதி இருப்பை அறிந்து கொள்ளும் இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கும் பல மில்லியன் ரூபா பணம் வீணாகச் செலவிடப்பட்டுள்ளதாக தேசிய கணக்காய்வு அதிகார சபை கண்டறிந்துள்ளது.15 ஆயிரம் ஊழியர்களுக்கான அடையாள அட்டை அச்சிடுவதற்கு 12.61 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. ஆனால் அந்த அட்டைகள் பயன்படுத்தப்படாமல் அலுவலகத்தில் தேங்கிக் கிடந்தமை கண்டறியப்பட்டுள்ளது. ஊழியர்களின் சேமலாப நிதி இருப்பை அறிந்து கொள்ளும் 35 இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இதற்காக 17.7 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. ஆனால் அவற்றில் தற்போது இரண்டு மாத்திரமே இயங்கு நிலையில் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. (ஒ-6)

## செலவை குறைக்க திட்டம்

கொழும்பு, டிசெ. 19
பெற்றோல், டீசல் என்பனவற்றுக்கும் அடுத்த மாதம் முதல் வரி விதிக்கப்படவுள்ளதால் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிர்வாக மற்றும் உற்பத்திச் செலவுகளைக் குறைப்பது தொடர்பில் ஆராய்ந்து வருவதாக கூட்டுத்தாபனத்தின் தலைவர் சாலிய விக்கிரமசூரிய தெரிவித்துள்ளார். (ஒ-6)

# பூநகரியில் மின் உற்பத்தி 49 ரூபாவுக்குக் கொள்வனவு

கொழும்பு, டிசெ.19
"பூநகரியில் உற்பத்தி செய்யப்படவுள்ள மின்சாரத்துக்கான உற்பத்திச்செலவு 0.15 அமெரிக்க டொலருக்கும் குறைவாகவே இருக்கும். ஒரு யுனிற் 49 ரூபா வீதம் கொள்வனவு செய்யப்படவுள்ளது" என்று மின்சக்தி எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.
'இந்த மின்கலச் சேமிப்பு வசதி ஆசியாவிலேயே கூடுதலான சேமிப்பு வசதியைக் கொண்டதாக இருக்கும். மார்ச் மாதம் கட்டுமானப்பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன' எனவும் அமைச்சர்மேலும்குறிப்பிட்டார். (ஒ-6)

## நாளை

20.12.2023
**புதன்கிழமை**
**மார்கழி 04**
சுபநேரம் : 04.54 - 06.24
ராகுகாலம் : 12.24 - 01.54

## நாளொரு நல்வார்த்தை

**இடர்பாடுகள் ஒருவனுக்கு உண்மையான நண்பர்களை எடுத்துக்காட்டும்.**
-அரிஸ்ரோட்டில்-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தனியான பொலிஸ் பிரிவு முக்கொம்பனில் தேவை!

## மக்கள் கோரிக்கை

**கிளிநொச்சி, டிசெ. 19**

**கிளிநொச்சி, பூநகரி- முக்கொம்பனில் அதிகரித்துள்ள குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு முக்கொம்பனுக்கு தனியான பொலிஸ் பிரிவு உருவாக்கவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

பூநகரி பொலிஸ் நிலையத்தில் அண்மையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின்போது அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

முக்கொம்பன் கிராமத்தில் கசிப்பு உட்பட சட்டவிரோதச் செயற்பாடுகள், குடும்ப, சமூக வன்முறைகள் தலைதூக்கியுள்ளன. அக்கராயன் பொலிஸாரால் இரவுவேளையில் முக்கொம்பனுக்கு ரோந்து நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டபோதிலும் நடைபெறுவதில்லை. எனவே முக்கொம்பனுக்கு விரைவில் பொலிஸ் பிரிவொன்றைஉருவாக்கிகுற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கைவிடுத்தனர். (ச-13)

# வாளுடன் பயமுறுத்தியவர் பொலிஸாரிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 19

வீதியில் சென்றோரை இரவுவேளையில் வழிமறித்து வாளைக்காட்டி அச்சுறுத்திய இருவரில் ஒருவரை பொதுமக்கள் மடக்கிப்பிடித்து சாவகச்சேரிப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு மட்டுவில் கண்ணன் கோவிலடி வீதியில் இடம்பெற்றுள்ளது.

21 வயதான சந்தேகநபரே வாளுடன் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

இதுகுறித்து சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் கேட்டபோது;

சந்தேகநபர் பொதுமக்களின் தாக்குதலில் காயமடைந்தமையால் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன- என்றார். (ச-125)


# மாங்குளத்தில் வடிகால்களை உருவாக்குக!




வன்னேரிக்குளம், டிசெ. 19

முல்லைத்தீவு, மாங்குளத்தில் மழைவெள்ளம் வடிந்தோடுவதற்கு ஏதுவாக, வடிகால் வசதிகளை ஏற்படுத்துமாறு மாங்குளம் நகர மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மாங்குளம் நகர்ப்பகுதியில், மழைக்காலத்தின்போது வெள்ளநீர் தேங்கிநின்று பொதுமக்களுக்கு பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்தி வருகின்றது. குறித்த பகுதியில் அண்மையில் மேற்கொள்ளப்பட்டசாலைப்புனரமைப்புகளையடுத்து வெள்ளம் வடிந்தோடுவதற்கான ஏற்பாடுகள் தொடர்பில் கருத்தில் கொள்ளப்படவில்லை என்றும் பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். ஆனால், வெள்ளம் வடிந்தோட ஏதுவாக வடிகால் வசதிகளை ஏற்படுத்தித் தருமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-13)



தேசிய விளையாட்டுத்துறை நிறுவனமும் மாகாண விளையாட்டுத் திணைக்களமும் இணைந்து நடத்திய முல்லைத்தீவு மாவட்ட பாடசாலை உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் பயிற்றுநர்களுக்கான பயிற்சிநெறி கடந்த 12 ஆம் திகதி முதல் 16ஆம் திகதிவரை மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. (ச-75)



# மேவிப்பாயும் வெள்ளத்தால் தீவானது மாந்தை கிழக்கு!

முல்லைத்தீவு, டிசெ.19

முல்லைத்தீவு, மாந்தை கிழக்குக்குச் செல்லும் மூன்று வீதிகளையும் மழை வெள்ளம் மூடிப் பாய்வதால் போக்குவரத்துத் துண்டிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களாகப் பெய்துவரும் கனமழையால் வவுனிக்குளம் தொடர்ந்து வான் பாய்ந்து கொண்டிருப்பதால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

மாந்தை கிழக்குக்கான சிவபுரம் குத்துப்பாலம், ஒட்டங்குளம் கறுப்புப்பாலம், மல்லாவி கரும்புள்ளியான் இணைப்புப் பாதை என்பவற்றையே மழை வெள்ளம் சூழ்ந்துள்ளது.

இதனால் பஸ் சேவை தடைப்பட்டுள்ளதுடன் வாகனங்களும் பயணிக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. வெள்ளம் வடிந்தோடிய பின்னரே மக்கள் பாதுகாப்பாகப் பயணிக்க முடியும் என்று மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (ச-13)

# வெள்ளநீரை வெளியேற்ற வடக்கு ஆளுநர் பணிப்பு

வவுனியா, டிசெ. 19

மக்களைப் பாதிக்கும் வகையில் தேங்கி நிற்கும் வெள்ள நீரை வெளியேற்ற உள்ளூராட்சி மன்றங்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் உத்தரவு பிறப்பித்துள்ளார்.



தற்போதைய காலநிலை மாற்றம் தொடர்பில் வடக்கு மாகாண ரீதியான கலந்துரையாடல் அண்மையில் இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்தே, வவுனியா மாவட்டச் செயலருக்கு ஆளுநரால் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

'வெள்ள நீர் வழிந்தோடாத வகையில் அனுமதியின்றி வேலி சுவர்கள் அமைக்கப்பட்டிருப்பின் உள்ளூராட்சி அலுவலக உத்தியோகத்தர்களால் துளையிடப்பட்டு நீரை வெளியேற்றவும். இதன்போது அந்தப் பகுதிகளின் கிராம அலுவலர்கள் மற்றும் பொலிஸாரையும் சம்பவ இடத்துக்கு அழைக்குமாறும்' ஆளுநர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (ஒ-110)



இளவாலையில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால் முன்னெடுக்கப்பட்டன. குடியிருப்புகளில் உள்ள நீர் தேங்கும் பொருள்கள் அகற்றப்பட்டு, அவை வலிகாமம் வடக்குப் பிரதேச சபையிடம் ஒப்படைக்கப்பட்டன. (எ-66)

# தேவன்பிட்டிப் பகுதியில் மழையால் இடம்பெயர்வு

மன்னார், டிசெ.19

மன்னார், தேவன்பிட்டி பகுதியில் மழையால் பலர் இடம்பெயர்ந்துள்ளனர் என்று மன்னார் இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.



மாந்தை மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் 80 குடும்பங்களைச் சேர்ந்த 161 பேரே இவ்வாறு இடம்பெயர்ந்துள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-213)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## பொதுச்சந்தை மற்றும் இறைச்சிக்கடை
## குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்விகள் அறிவித்தல் - 2024

கீழ்க்குறிப்பிடப்படும் பொதுச்சந்தை மற்றும் இறைச்சிக்கடைக்கான மீள்கேள்விகள் சபையினால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 19.12.2023 - 27.12.2023 நண்பகல் 12.00 மணி வரை
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி : 27.12.2023 புதன்கிழமை பி.ப 02.00 மணி வரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 27.12.2023 புதன்கிழமை பி.ப 02.00 மணி
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் : வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்.

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாகக் குறிப்பிட்டு மூலப்பிரதியை **"செயலாளர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்"** என்னும் முகவரிக்கும், இணைப்பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்"** என்னும் முகவரிக்கும் எதிர்வரும் 27.12.2023 ஆம் திகதி புதன்கிழமை பி.ப 02.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேலும் கேள்வியை தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.

உரிய கட்டணங்களைச் செலுத்தி கேள்விப்பத்திரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**மீள்கேள்விகள் அறிவித்தல்**

| இல | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவ கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | மாதாந்த வாடகை | மீள் கேள்வித் தொகை (VAT,NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| **அச்சுவேலி உப அலுவலகம்** | | | | | |
| 1 | வளலாய் தம்பாலை பொதுச்சந்தை | 1,000.00 | 2,000.00 | | 226,692.00 |
| **உரும்பிராய் உப அலுவலகம்** | | | | | |
| 2 | உரும்பிராய் ஆட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 2,250.00 | 553,400.00 |

கேள்விகள் தொடர்பான நிபந்தனைகளை ஏற்கனவே 2023.11.01, 2023.11.18 ஆம் திகதிகளில் இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தலில் குறிப்பிட்டதற்கமைவாக பின்பற்றவும். மேலதிக விவரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

**இராமலிங்கம் பகீரதன்**
**செயலாளர்,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.**

(cr.41347) (N.1)

**2023.12.19**


# ஹமாஸின் பெரும் சுரங்கம் இஸ்ரேல் படைகளின் வசம்!

நியூயோர்க், டிசெ.19

காஸாவில் ஹமாஸ் அமைப்பின் மிகப்பெரிய சுரங்க வழிப்பாதையை இஸ்ரேல் பாதுகாப்புப் படை வீரர்கள் நேற்றுமுன்தினம் கண்டுபிடித்துள்ளனர்.

காஸாவில் தரைவழித் தாக்குதலை நடத்திவரும் இஸ்ரேலியப் பாதுகாப்புப் படை, ஹமாஸ் அமைப்பின் மிகப்பெரிய சுரங்கப் பாதையைக் கண்டுபிடித்துள்ளது.

4 கிலோமீற்றர் தூரத்துக்குப் பரந்து விரிந்துள்ள இந்தச் சுரங்கப்பாதை அமைப்பு எல்லை கடப்புப் பகுதியில் இருந்து 400 மீற்றர் தொலைவில் தொடங்குகின்றது என்று இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

தேன்கூடு அமைப்பிலான வலைப்பின்னல் சுரங்கப் பாதைக்குள் மின்சார வசதி, ரயில் தண்டவாளங்கள், இணைய வசதி, கழிவுநீர் வெளியேற்றம், காற்றோட்ட வசதி ஆகியன இருப்பதாகவும் இஸ்ரேலியப் பாதுகாப்புப் படை தெரிவித்துள்ளது.

சுரங்கத்தின் சுவர்கள் வலுவான சிமெந்து பூசப்பட்டு இருப்பதுடன், அதன் நுழைவு வாயில் 1.5 செ.மீ. தடிமன் கொண்ட உலோக உருளை போன்ற அமைப்புடன் வடிவமைக்கப்பட்டு இருப்பதாக வீடியோ ஆதாரத்துடன் இஸ்ரேலியப் பாதுகாப்புப் படை தகவல் வெளியிட்டுள்ளது. (ஏ-இ)


## மரண அறிவித்தல்

தோற்றம்
22
★
10
★
1935



மறைவு
17
★
12
★
2023

## சிவசம்பு சிவராஜா (குணம்)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் மாங்கொல்லை காங்கேசன்துறை, கொழும்பு, லண்டன் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட சிவசம்பு சிவராஜா அவர்கள் 17.12.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசம்பு அனேஸ்வரி (செல்வம்) தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்ற ராஜேஸ்வரியின் கணவரும், குமரன் (அவுஸ்திரேலியா), கண்ணன் (இங்கிலாந்து), துமிலன் (Group Chairman/ CEO- Blue Ocean Group of Companies) ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்றவர்களான சிவபாஸ்கரன், சிவராணி, சிவயோகம் ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற சுமித்ரா, காலஞ்சென்ற கனகசபை, பத்மராணி (கனடா) ஆகியோரின் மைத்துனரும், ராதாகுமரன், Dr. சீதா கண்ணன், சுராணி துமிலன் ஆகியோரின் மாமனாரும், அக்ஷரா, கவின், ரஷ்மி, சந்துஷ், வைஷிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (19.12.2023) செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் முற்பகல் 10.00 மணிவரையும் நாளை (20.12.2023) புதன்கிழமை காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரையும் ஜெயரட்ண ரெஸ்பெக்ட் ஹோம் வி.ஐ.பி (Jeyaratna Respect Home VIP) மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு அதன் பின் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, மாலை 4.00 மணிக்கு பூதவுடல் பொரளை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு :
077 302 8400 (துமிலன் - மகன்)
077 302 8401 (சுராணி - மருமகள்)
006 141 317 7721 (குமரன் - மகன்)
447 960 969 684 (கண்ணன் - மகன்)

**41A, செப்பல் வீதி, நுகேகொடை.**

(cr.41345) (N.1)

## மரண அறிவித்தல்



**தோற்றம்: 03.01.1967** —— **மறைவு: 17.12.2023**

## நாகையா புவனேஸ்வரன் (தயா)

சுதுமலை தெற்கைப் பிறப்பிடமாகவும் குமரகோட்டம், கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட நாகையா புவனேஸ்வரன் அவர்கள் கடந்த (17.12.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் நாகையா தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னுச்சாமி அன்னலட்சுமி தம்பதியரின் மருமகனும், விமலராணியின் அன்புக் கணவரும், அக்ஷஜன் (A/L 2024 யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), யதுர்சிகா (O/L 2023 யா/கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தயாநிதி, கலாநிதி (இலண்டன்), கமலாம்பிகை (இலண்டன்), காலஞ்சென்றவர்களான ராதா, ஜீவன் மற்றும் ஜெயக்குமார் (பிரான்ஸ்), கண்ணன் (பிரான்ஸ்), கோமதி (கொலண்ட்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், நேசரட்ணம், விஜயபாலன், ஜெகதீஸ்வரன், துஷாணி, ஜிந்து, சிவாகரன், பரமேஸ்வரராஜா, செல்வராஜா, செல்வராணி, சந்திரராஜா, புஸ்பராணி, இந்திரராஜா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**தகவல்: குடும்பத்தினர்.**
**078 911 7314**
**021 205 3724**

(CS 27417) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

பிறப்பு 01 . 06 . 1937



இறப்பு 19 . 11 . 2023

## அமரர் வேலுப்பிள்ளை கந்தையா

அன்பின் திருவுருவாய் பாசத்தின்
உறைவிடமாய் பண்பின் இருப்பிடமாய்
இருந்து எம்மை காத்த ஐயாவே
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கடந்த 19.11.2023 அன்று காலமான வேலுப்பிள்ளை கந்தையா (சேவையர் ஐயா) அவர்களின் வீட்டுக்கிருத்தியம் இன்று (19.12.2023) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். இந் நிகழ்விலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


இருட்டு மடு,
உடையார்கட்டு.

குடும்பத்தினர்
077 305 2484

(cr.41342) (N-1)

# மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 09 . 1944



மறைவு 10 . 12 . 2023

## ஆறுமுகம் சிவராசா

யாழ். உசனைப் பிறப்பிடமாகவும் பிரித்தானியா, லண்டன் Ilford ஐ வாழ்விடமாகவும் கொண்ட ஆறுமுகம் சிவராசா அவர்கள் கடந்த (10.12.2023) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை செங்கமலம் தம்பதியரின் அன்பு மருமகனும், விமலாம்பிகை (பேபி) அவர்களின் அன்புக் கணவரும், பார்த்தீபன் அவர்களின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற அன்னலட்சுமி (பரமேஸ்வரி), மனோன்மணி (இந்திரா - கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சின்னத்துரை, தட்சணாமூர்த்தி (கனடா), காலஞ்சென்ற கமலாம்பிகை, சிவப்பிரகாசம், சிவசுப்பிரமணியம், காலஞ்சென்ற சிவானந்தசோதி (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், நிறஞ்சலா (நிறஞ்சி - லண்டன்), கிருபராஜா (கிருபா - கனடா), கோகுலராஜ் (செந்தூரன் - லண்டன்), நிருபனா (நிரு - லண்டன்), நிகேதன் (கனடா), நிவாசன் (கனடா), நிருத்திகா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அஷ்ணவி (லண்டன்), லவீனா (கனடா), லக்ஷனா (கனடா), நிஷானி (கனடா), கேஷிகா (லண்டன்), அபிமன்யு (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.12.2023) புதன்கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

பார்த்தீபன் - மகன் - +447 927 111 446
சிவப்பிரகாசம் - மைத்துனர் - 077 224 2006

(cs5320) (CS) N-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 06 . 1936



மறைவு 15 . 12 . 2023

## திருமதி யோகரட்ணம் கனகசபாபதி

யாழ்ப்பாணம் மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகரட்ணம் கனகசபாபதி கடந்த (15.12.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை (ஸ்தாபகர், மாப்பியன் மில்) தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கனகசபாபதி (இளைப்பாறிய புகையிரத தலைமைப் பாதுகாவலர்) அவர்களின் அன்பு மனைவியும், ரஜனி (ஓய்வுபெற்ற உப அதிபர், யா/ ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம்), ரஞ்சிற் (U.S.A) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற சிறீகரன் (ஓய்வுபெற்ற உப அதிபர், யா/பரியோவான் கல்லூரி) மற்றும் பூம்பா (U.S.A) ஆகியோரின் அன்பு மாமியாரும், தர்மரட்ணம் (London), காலஞ்சென்ற ஞானரட்ணம் மற்றும் அமிர்தரட்ணம் (Canada), பஞ்சரட்ணம் (மானிப்பாய் - மில்), சுகிர்தரட்ணம் (Colombo) மற்றும் காலஞ்சென்ற விஜயரட்ணம் அவர்களின் பாசமிகு சகோதரியும், ரகுராஜ் (ஆராய்ச்சி உத்தியோகத்தர், TRI, தலவாக்கலை), ரூபினி (சுற்றாடல் உத்தியோகத்தர், CEA) - பிருதிவி (பொறியியலாளர், Ministry of Water Supply ), டிலக்ஷனா (U.S.A), அர்ச்சுனா (U.S.A) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், யுஹாசினியின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"விஜயாபதி"
கல்லூரி ஒழுங்கை, மானிப்பாய்.

(cs5320) (CS) N-1

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

மலர்வு 12 . 12 . 1963



உதிர்வு 18 . 12 . 2023

## செல்வி தாமோதரம்பிள்ளை பரமேஸ்வரி

பத்திரகாளி கோயில் ஒழுங்கை, பருத்தித்துறையினைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை பரமேஸ்வரி நேற்று (18.12.2023) திங்கட்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் மகளும், தாமோதரம்பிள்ளை நாகலிங்கம் (ஓய்வு பெற்ற முகாமைத்துவ உதவியாளர்), செல்வி தாமோதரம்பிள்ளை சிவரஞ்சினி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2023) செவ்வாய்க் கிழமை அதிகாலை 6.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று காலை 7.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பத்திரகாளி ஒழுங்கை,
பருத்தித்துறை.

(cs27408) (CS) N-1

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயனின் உலகக் ண்ணக் கிரிக்கெட் கொண்டாட்டம்; பரிசளிப்பு நிகழ்வுப் பதிவுகள்














உதயன் உலகக் கின்ண கிரிக்கெட் கொண்டாட்டத்தின் பரிசளிப்பு நிகழ்வு கடந்த சனிக்கிழமை உதயன் தலைமைப் பணிமனையில் இடம்பெற்றது. உதயன் குழுமத் தலைவர் ஈ.சரவணபவன் மற்றும் அவரது பாரியார் திருமதி யசோதை சரவணபவன் இருவரும் இணைந்து போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான காசோலைகளை வழங்கி வைத்தனர்.

## ஐக்கிய தேசியக் கட்சியில் தலைமைத்துவசபை

கொழும்பு, டிசெ.19

ஐக்கிய தேசியக் கட்சியில் தலைமைத்துவசபை நியமிக்கப்பட்டுள்ளது என்று அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் கட்சியின் முடிவுகள் எடுக்கும் அதிகாரங்கள் உட்பட அனைத்து அதிகாரங்களும் இந்தத் தலைமைத்துவ சபைக்கு வழங்கப்படும் எனக் கூறப்படுகிறது.

தலைமைத்துவசபை நியமிக்கப்பட்டுள்ளதால், ஐக்கிய தேசியக்கட்சியின் சில பதவிகள் இரத்துச் செ பப்பட்டுள்ளன.

ருவ ர் விஜேவர்த்தன, ரவி கருண யக்க, அகில விராஜ் காரியவச காகல ரத்நாயக்க, ஹரின் பெ ண்டோ, நவீன் திஸாநாயக் ஜிர அபேவர்த்தன ஆகியோ ஐக்கிய தேசியக்கட்சியின் தல மைத்துவ சபைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலும் மாற்றம் செய்யப்பட உள்ளது. ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலாளராக பாலித ரங்கே பண்டார தற்போது பதவி வகித்து வருகிறார். அவருக்குப் பதிலாக ரவி கருணாநாயக்க அந்தப் பதவிக்கு நியமிக்கப்படலாம் எனக் கூறப்படுகிறது.


(எ-இ)

## வரிகளை ஏற்றாமல் வருமானமீட்டலாம்

### சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.19

**மக்கள் மீது எவ்வித வரிச் சுமைகளையும் ஏற்றாது, நாட்டின் வருமானத்தை 50 வீதமாக அதிகரிக்க முடியும் ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.**



நாட்டுக்குள் எவ்விதமா வரிகளையும் செலுத்தாது ஆடம்பர வாழ்க்கையை வாழும் செல்வந்த வகுப்பினர் இருக்கின்றனர். அந்தப் பணக்கார வகுப்பினர் வருமானத்தைச் சரியாகக் கண்டறிய அரசாங்கம் அச்சப்படுகிறது.

இவர்களின் வருவாய், செலவுகள் தொடர்பான விபரங்கள் சரியான முறையில் கிடைச் ாதது சிக்கலுக்குரியது. மருத்துவர்களின் சம்பளம் பற்றிய விபரங்கள் கிடைப்பதால், அதற்கு வரி அறவிடப்படுகிறது. செல்வந்தர்களின் வருமானம் தொடர்பான விபரங்கள் கிடைப்பதில்லை வரி அறவிடுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

செல்வந்தர்களின் வருமானத்தை அறியும் விதம் தொடர்பான வேலைத்திட்டத்தை உருவாக்கினால், புதிதாக வரிகள் எதுவும் தேவையில்லை. 5 கோடி ரூபாவுக்கும் மேல் வரி செலுத்துவோர் சுமார் 2 ஆயிரத்து 500 பேர் இருக்கின்றனர். அதில் சிக்காத மேலும் 2 ஆயிரத்து 500 பேர் இருக்கின்றனர்.

இவர்களுக்குக் கிடைக்கும் உண்மையான வருமானத்தைப் பெற்றுக்கொள்ளும் முறையை ஒரு மாதத்தில் உருவாக்கி விடலாம் -என்றார்.

(எ-இ)

## பூந்தோட்டத்தில் இலவச கற்றல்





வவுனியா, டிசெ. 19

வவுனியா, பூந்தோட்டம் நரசிங்கர் ஆலயத்தின் கல்வி சமூக அபிவிருத்தி நிதியத்தின் ஏற்பாட்டில் இலவசக்கற்றல் வகுப்புகள் ஆரம்பிக்கும் நிகழ்வு நரசிங்கர் ஆலய கலாசார மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றது.

ஆலயத்தின் தலைவர் கோ.சிறீஸ்கந்தராஜாவின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக மேலதிக மாவட்டச்செயலாளர் தி.திரேஸ்குமார் , நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் பொருளாதாரம் நலிவுற்ற 125 மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களும் கையளிக்கப்பட்டன.

(ச-110)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தரமற்ற பொருள்களால் சிறுவர்களுக்கு ஆபத்து

## மருத்துவர் மஹிந்த விக்கிரமாராச்சி எச்சரிக்கை

**கொழும்பு, டிசெ.19**

**பாடசாலை மாணவர்களால் பரவலாகப் பயன்படுத்தப்படும் தரமற்ற மற்றும் மலிவாக இறக்குமதி செய்யப்படும் பாடசாலை எழுது பொருள்கள் மற்றும் பிளாஸ்ரிக் உணவுப் பெட்டிகள் என்பன கடுமையான சுகாதார அபாயங்களை ஏற்படுத்துகின்றன என்று லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையின் தரக் கட்டுப்பாட்டுப் பிரிவின் தலைவர் மருத்துவர் மஹிந்த விக்கிரமாராச்சி எச்சரித்துள்ளார்.**

இதுதொடர்பிலானமுறைப்பாடுகள்இருந்த போதிலும், சமீபத்திய ஆய்வில், இந்தப் பொருள்களில் கனரக உலோகங்கள் உபயோகிக்கப்பட்டிருப்பதும், அவை குழந்தைகளின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் என்பதும் தெரியவந்துள்ளது.

பென்சில்கள், வண்ணப் பென்சில்கள், பிளாஸ்ரிக் தண்ணீர்ப் போத்தல்கள், உணவுப் பெட்டிகள் மற்றும் மதிய உணவுப் பெட்டிகள் போன்ற பொருள்கள் சர்வதேச தரத்தை மீறுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்த எழுது பொருள்கள் மற்றும் பொம்மைகள் எந்த கன உலோகங்களையும் சேர்க்காத வண்ணங்களால் வர்ணம் பூசப்பட வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

பிளாஸ்ரிக் பொருள்களில் Bisphenol A எனப்படும் மிகவும் ஆபத்தான இரசாயனம் உள்ளது. இது காலப்போக்கில் குழந்தைகளில் புற்றுநோய் செல்களைக் கூட ஏற்படுத்தக்கூடும்.

தமது பிள்ளைகளின் அடுத்த பாடசாலைப் பருவத்துக்கு எழுது பொருள்களைக் கொள்வனவு செய்யும்போது, இந்தச் சுகாதார உண்மைகள் தொடர்பாகப் பெற்றோர் அக்கறையுடன் செயற்படவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

# வடமராட்சியில் காய்ச்சல் தீவிரம்!

பருத்தித்துறை, டிசெ. 19

வடமராட்சிப் பிரதேசத்தில் உண்ணிக்காய்ச்சல் பாதிப்பு தொடர்ந்து அதிகரித்து வருவதாக பருத்தித்துறை ஆதார மருத்துவமனைத் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் மாதாந்தம் தலா ஒருவர் அல்லது இருவர் உண்ணிக்காய்ச்சல் காரணமாகப் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆடு, மாடு, கோழி, நாய் போன்ற வளர்ப்புப் பிராணிகள் மற்றும் கால்நடைகளில் உள்ள உண்ணிகள் மூலம் ஏற்படும் உண்ணிக்காய்ச்சல் மழைக்காலத்தில் மேலும் அதிகரிக்கும் என்பதால் மக்கள் அவதானமாகச் செயற்படவேண்டும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. (ஒ-100)

# வெள்ளப் பேரிடர் உதவிசெய்யுங்கள்


## சிறீதரன் எம்.பி. அழைப்பு

கிளிநொச்சி, டிசெ. 19

வெள்ள இடரால் பாதிப்புற்றிருக்கும் மக்களுக்கு உடனடி உதவிகளை வழங்கி வைக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

கண்டாவளைப் பிரதேசத்துக்கு உட்பட்ட பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த மக்கள், வெள்ள இடர் காரணமாகத் தமது இருப்பிடங்களிலிருந்து இடம்பெயர்ந்து, கண்டாவளை மகா வித்தியாலயம், நாகேந்திரபுரம் அ.த.க.பாடசாலை, முரசுமோட்டை அ.த.க. பாடசாலை ஆகிய மூன்று பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

அந்த மக்களை நேரடியாகச் சென்று பார்வையிட்டு, உலருணவுப் பொதிகளையும் வழங்கிவைத்த போதே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார். (ஒ-113)



# தமிழ்மொழித் தின சங்கமம் நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ. 19

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் தமிழ்மொழித் தின சங்கமம் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் மேற்படி கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் கல்லூரி அதிபர் இ. செந்தில்மாறன் முன்னிலையில் இடம்பெறவுள்ளது. (ம-66)

# கடந்த ஆண்டைவிடவும் சிறப்பான பொருளாதாரம்

கொழும்பு, டிசெ.19

இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைமை கடந்த ஆண்டைவிடவும் சிறப்பாக இருக்கின்றது என்று அமெரிக்காவின் ஜோர்ஸ் வொஷிங்டன் பல்கலைக்கழகத்தின் சிறப்புப் பேராசிரியர் சாந்த தேவராஜன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரம் தற்போதும் பின்னடைவு மட்டத்திலேயே இருக்கின்றது. ஆனால் 2022ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது பொருளாதாரம் சிறப்பாக இருக்கின்றது.

இந்த ஆண்டு அரசாங்கம் பணவீக்கத்தை 70 சதவீதத்தில் இருந்து 2 சதவீதமாகக் கொண்டு வந்திருக்கின்றது. அரசாங்கம் இந்த மறுசீரமைப்பு வேலைத்திட்டங்களைத் தொடர்ந்தும் முன்னெடுக்குமாக இருந்தால் அடுத்த ஆண்டு நிச்சயம் பொருளாதார வளர்ச்சி நிலைமை காணப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)



# பேரமுன சார்பில் தம்மிக்க?

2024 ஜனாதிபதித் தேர்தலில் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக நாடாளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேராவை முன்னிறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதித் தேர்தலில் தாம் வேட்பாளராகப் போட்டியிடத் தயார் என நாடாளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேரா ஏற்கனவே தெரிவித்துள்ளார்.

'எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட விருப்பம். ஆயினும், மொத்த வாக்குகளில் குறைந்தது 51 வீதமான வாக்குகளைப் பெறுவது உறுதியானால் மாத்திரமே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவேன்' என தம்மிக்க பெரேரா தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், தம்மிக்க பெரேராவை சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளராக நியமிக்க வேண்டும் என்று அந்தக் கட்சியின் உறுப்பினர்கள் குழுவொன்று வலியுறுத்தியுள்ளது என்றும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

தம்மிக்க பெரேரா, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல துறைகளில் முதலீடுகளை மேற்கொண்டுள்ளதுடன், பொருளாதாரத்தில் [illegible] அனுபவம் பெற்றவராவார். (எ-இ)


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 18 • 04 • 1945

விண்ணில் 21 • 12 • 2020



### அமரர் நாகமுத்து கேதாரம்

நாகமுத்து லட்சிமியில் ஐயிரண்டு திங்கள் வளர்
திருநீற்று நெற்றி கொண்ட திண்மை மிகு கேதாரம்
ஆசாரியாராகி அங்குலத்தால் உலகளந்து

மேஸ்திரியாய் தச்சு தொழிலிலே மேன்மைபெற்று
மாற்று கருத்தின்றி மக்கள் மனம் கவர்ந்திருக்கும்
தேற்றமிகு அப்பாவே தென்றலாய் தவழ்ந்து வாரும்
ஆண்டுமூன்று கடந்த இந்த கணப்பொழுது கனக்கிறது

மாண்டார் தீர்பில் நீங்கள் நன்மதிப்பை பெற்றிருப்பீர்
சான்று பகரும் சந்ததி நதிகளிலே
சந்திர விம்பமாக உமை அமர்த்தி சென்றுள்ளீர்-நாம்
வளர்பிறை பிள்ளைகளாய் வளர்கிறோமிப் புவிதனிலே

வறுமையில் செம்மை செய்தீர் செல்வத்தில் அறத்தை செய்தீர்
காலங்கள் செல்ல செல்ல அன்பொடு சிவமாய் கலந்தீர்
மீளார் துயிலில் சேர்ந்த ஆத்ம ஞானச்செல்வர்
காலம் பல கழினும் உம் நினைவுகள் எம்முடனே!

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வெள்ளப்பேரிடர்...

வற்றாப்பளை செல்லும் வீதியின் போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சியிலும் வெள்ள நீரால் பல வீதிகளில் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி ஏ-9 வீதியின் 155ஆம் கட்டைப் பகுதியில் மரமொன்று குடைசாய்ந்ததில் அந்த வீதியின் ஊடான போக்குவரத்து பல மணிநேரம் துண்டிக்கப்பட்டுள்ளது. (அ-ம-19)

## பாய்கிறது...

**முல்லைத்தீவு**

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொட்டித்தீர்த்த மழையால் 83 கிராமங்கள் வெள்ளப் பேரிடரை எதிர்கொண்டுள்ளன. 1,600 க்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். சுமார் 10 இடைத்தங்கல் முகாம்கள் அமைக்கப்பட்டு அவற்றில் 341 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 100 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் ஆகக்கூடிய பாதிப்புகளை எதிர்கொண்ட பிரதேசமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அங்குமட்டும், புளியங்குளம் பொது நோக்கு மண்டபத்தில் 6 குடும்பங்களும், பண்டாரவன்னியன் கிராமத்தைச் சேர்ந்த 69 குடும்பங்கள் கருவேலங்கண்டல் அ.த.க. பாடசாலையிலும், கூழாமுறிப்பு கிராமத்தினைச் சேர்ந்த 61 குடும்பங்களைச் சேர்ந்த 178 பேர் கூழாமுறிப்பு அ.த.க. பாடசாலையிலும், முத்துவிநாயகபுரம் கிராமத்தில் [illegible]5 குடும்பங்களைச் சேர்ந்த 131 பேர் முத்துவிநாயகபுரம் மகாவித்தியாலயத்திலும், பேராறு கிராமத்தில் 23 குடும்பங்களைச் சேர்ந்த 65 பேர் பேராறு அ.த.க. பாடசாலையிலும், தங்கவைக்கப்பட்டுள்ளார்கள்.

கரைதுறைப்பற்று பிரதேசத்தில் கொக்குத்தொடுவாய் வடக்கில் 2 குடும்பங்களைச் சேர்ந்த 10 பேர் கொக்குத்தொடுவாய் வடக்கு பாடசாலையிலும், புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மன்னாங்கண்டல் கிராமத்தில் 135 குடும்பங்களைச் சேர்ந்த 408 பேர் மன்னாங்கண்டல் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலும் தங்கவைக்கப்பட்டுள்ளார்கள்.

**கிளிநொச்சி**

கிளிநொச்சி மாவட்டத்திலும் மழை காரணமாக பேரிடர் நிலை ஏற்பட்டுள்ளது. இரணைமடுக் குளத்திலிருந்து அதிளவான தண்ணீர் வெளியேற்றப்படுவதன் காரணமாக, வட்டக்கச்சி, பெரியகுளம், கண்டாவளை, நாகேந்திரபுரம், முரசுமோட்டை, ஐயன்கண்குளம் ஆகிய பகுதிகளில் உள்ள நூற்றுக் கணக்கான குடும்பங்கள் வெளியேற்றப்பட்டுள்ளன. அவர்களுக்கான சமைத்த உணவுகள் பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்கப்படுகின்றன. அந்தப் பகுதியில் உள்ள பலநூறு கால்நடைகள் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. வெள்ளத்துடன் வெளியேறிய முதலைகள் குடியிருப்புப் பகுதிக்குள் நுழைந்துள்ளமையாலும் பொதுமக்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டுவருகின்றனர். முதலைக் கடிக்கு இலக்கான ஒருவர் கிளிநொச்சி மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

**மன்னார்**

மடு, பண்டிவிரிச்சான், பெரிய பண்டிவிரிச்சான், பூம்புகார் பகுதிகளிலிருந்து பலநூறு குடும்பங்கள் வெள்ள இடரால் வெளியேற்றப்பட்டுள்ளன.

**யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணத்தில் யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் கூடுதலான மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. கோப்பாய், உடுவில், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுகளில் கூடுதல் தாக்கத்துக்கு உட்பட்டுள்ளன. கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 10 குடும்பங்களைச் சேர்ந்த 41 பேரும், உடுவில் பிரதேச செயலர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேரும், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 60 குடும்பங்களைச் சேர்ந்த 205 பேரும் என மொத்தமாக 71 குடும்பங்களைச் சேர்ந்த 252 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் 8 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் ஆறு குடும்பங்களைச் சேர்ந்த 21 பேர் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அன்னை முன்பள்ளி நிலையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளதுடன் அவர்களுக்காக சமைத்த உணவும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் தென்மராட்சிப் பகுதியில் பெய்யும் கடும் மழையால் நாவற்குழி ஐந்து வீட்டுத் திட்டப்பகுதியில் வசிக்கும் 14 குடும்பங்களைச் சேர்ந்த 46 பேர் வெளியேற்றப்பட்டு இடைத்தங்கல் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். (அ-ம-19-75-09)

## மத்தியின்...

பகிரப்படவேண்டும். அவ்வாறு பகிரப்பட்டாலேயே நல்லிணக்கம் என்பது சாத்தியம் என்று தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினரான மனோ கணேசன். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை என்பது ஒரு சிங்கள, பௌத்த நாடு என்ற நிலைப்பாட்டில் சிலர் உள்ளனர். வடக்கு - கிழக்கை இணைத்து தனி நாடு உருவாகும் என மேலும் சிலர் கருத்து வெளியிட்டுவருகின்றனர். இலங்கையென்பது தனி இனத்துக்கு உரித்தான நாடு அல்ல. தமிழ், சிங்களம், முஸ்லிம் என மூவின மக்களும் வாழ்கின்றனர். பல்லின சமூகம் வாழும் நாடாகும். பெரும்பான்மையாக சிங்களவர்கள் வாழ்வதால் இது சிங்கள நாடாகிவிட முடியாது.

எனவே, பல்லின சமூகம் வாழும் இந்த நாடு அனைவருக்கும் உரித்தானது என்பதை இன்றைய இளைஞர்கள் புரிந்துகொள்ள வேண்டும். மாற்றம் தொடர்பில் தற்போதாவது சிந்திக்க வேண்டும்.

மாகாணசபை முறைமையென்பது வடக்கு - கிழக்குக்கு மட்டும் அல்ல. 9 மாகாணங்களுக்கும் உரித்தானது. மத்தியில் குவிந்து கிடக்கும் அதிகாரங்கள் மாகாணத்துக்குப் பகிரப்பட வேண்டும். வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்குக்கு அதிகாரப்பகிர்வு அவசியம். அதிகாரப் பகிர்வு என்பது ஜனநாயக பண்பாகும்' - என்றார். (அ-ம-44)

## மஹிந்தவின்...

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது இது தொடர்பில் கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் மேலும் தெரிவித்ததாவது:-

பெரமுனவின் மாநாட்டில் உரையாற்றிய மஹிந்த ராஜபக்ச தமது கரங்களில் இரத்தக்கறை படியவில்லை, எம்முடன் இணையுங்கள் எனக் கூறியுள்ளார். 2005 முதல் 2015 வரை மஹிந்த ராஜபக்சதான் ஜனாதிபதியாக இருந்தார். அவரது சகோதரர்தான் பாதுகாப்புச் செயலாளர்.

லசந்த விக்கிரமதுங்க, தாஜுதீன், பிரதிப் எக்னெலிகொட, ரவிராஜ், சிவராமன், போத்தல ஜயந்த உள்ளிட்டவர்களில் சிலர் கொல்லப்பட்டுள்ளனர். 2005ஆம் ஆண்டு முதல்தான் இந்தக் கொலைகள் இடம்பெற்றுள்ளன. மஹிந்தவின் கையில் இரத்தக் கறை இல்லாமல் இருக்கலாம். அவரின் அலுமாரியில் எலும்புக்கூடுகள் இருக்கும்.

இந்த கொலைகளுக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை. மைத்திரி - ரணிலின் கூட்டாட்சியில் நீதி கிடைக்கவில்லை. மைத்திரி - ரணிலின் ஆட்சியின்போது ராஜபக்சக்களின் வழக்குகள் மறைக்கப்பட்டன. இந்த விசாரணைகள் தொடர்பில் ஷானி அபேசேகரவுக்கு எல்லாம் தெரியும். அதனால்தான் அவரைக் கொலை செய்வதற்கு முயற்சி எடுக்கப்படுகின்றது. இந்தக் கொலைகள் அரசியல் படுகொலைகளாகும். லசந்த, தாஜுதீன், ரவிராஜ் போன்றவர்களை கொல்ல வேண்டிய தேவை யாருக்கு இருந்தது என்பது அனைவருக்கும் தெரியும்' - என்றார். (அ-ம-44)

## யாழ்...

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 8.30 மணிமுதல் நேற்றுத் திங்கட்கிழமை காலை 8.30 மணி வரையிலான 12 மணித்தியாலங்களில், யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் உச்சக்கட்டமாக 58.7 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

யாழ். அச்சுவேலியில் 53.4 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், தெல்லிப்பழையில் 50.4 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், தொல்புரத்தில் 43.0 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், யாழ்ப்பாணம் கோட்டையில் 41.8 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், திருநெல்வேலியில் 38.4 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், பருத்தித்துறையில் 34.0 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும், வடமராட்சி அம்பனில் 31.7 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், சாவகச்சேரியில் 28.3 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும், நயினாதீவில் 27.1 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், மீசாலையில் 27.0 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளன. (அ-ம-66)

## இன்றிரவு...

தோன்றியுள்ள காற்றுச் சுழற்சியானது மேற்கு நோக்கி, இலங்கைக்கு கீழாக நகர்ந்து அரபிக்கடலை சென்றடைவது தான்.

இந்த சுழற்சிக் காற்றானது நாளை அல்லது நாளைமறுதினம் இலங்கையிலிருந்து முழுமையாக விடுபட்டு அரபிக் கடலுக்குச் செல்வதன் காரணமாக நாளை இரவு முதல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளுக்கும் படிப்படியாக மழைவீழ்ச்சி குறைவடைவதற்கான சந்தர்ப்பம் உள்ளதென எதிர்பார்க்கப்படுகிறது.

வடக்கு மாகாணத்தில் இருக்கின்ற 54 நடுத்தர மற்றும் மிகப்பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் அவற்றினுடைய உவர் நீரை வெளியேற்றுவதன் காரணமாகவும், தொடர்ச்சியாக 100 மில்லிமீற்றருக்கு மேற்பட்ட மழைவீழ்ச்சி பல பிரதேசங்களில் பதிவாகி இருப்பதன் காரணமாகவும் வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலும் வெள்ள இடருக்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன என்றும் எதிர்வுகூறப்படுகின்றது. (அ-ம-27)

## பேசாலையில்...

அரச அலுவலர்களான கணவனும், மனைவியும் பணிக்குச் சென்ற வேளையில், வீட்டின் முன்கதவை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் இந்தத் திருட்டில் ஈடுபட்டுள்ளனர். வீட்டின் அலுமாரிக்குள் வைக்கப்பட்டிருந்த சுமார் ஐம்பது பவுணுக்கு மேற்பட்ட நகைகளும், முப்பதாயிரம் ரூபா பணமும் இவ்வாறு திருடப்பட்டுள்ளதாகப் பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-60)

## நாயால்...

அடையாளம் காட்டியதை அடுத்து அவர்கள் மடக்கிப்பிடிக்கப்பட்டனர். விசேட போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கையின் ஒருகட்டமாக நெல்லியடிப் பொலிஸார் மோப்ப நாய் சகிதம் மேற்கொண்ட நடவடிக்கையின்போதே மேற்படி இருவரும் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து சிறு தொகை போதைப்பொருள்களும் மீட்கப்பட்டன. (அ-ம-100)

## இளைஞர்...

கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கு அமையவே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. குறித்த சந்தேகநபருக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (அ-ம-125)

## குடும்பப்பெண்...

அதிகாலை வேளையில் தண்ணீர் எடுப்பதற்காகச் சென்ற மேற்படி பெண்ணைக் காணவில்லை என்று தேடிய போதே அவர் கிணற்றுக்குள் சடலமாக அவதானிக்கப்பட்டு மீட்கப்பட்டார். பளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். (அ-ம-9)

## இந்திய...

வைக்கப்பட்டுள்ளனர். மீனவர்கள் 14 பேரையும் எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்ற பதில் நீதிவான் உத்தரவிட்டார். (அ-ம-27-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயன்படுத்த முடியாத நிலையில் 20.75 மெ.தொன் விதை உ.கிழங்கு


**யாழ்ப்பாணம், டிசெ. 19**
**2023ஆம் ஆண்டு கால போகத்தில் செய்கை பண்ணுவதற்காக விவசாய நவீன மயமாக்கல் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட 20.75 மெற்றிக்தொன் விதை உருளைக் கிழங்குகள் பயன்பாட்டுக்கு உட்படுத்த முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரியவந்துள்ளது.**

அவுஸ்திரேலியாவிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக்கிழங்குகள் பாவனைக்கு உதவாத நிலையில் காணப்படுவது தொடர்பாக யாழ். மாவட்டச்செயலகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கலந்துரையாடலொன்று இடம்பெற்றது. கலந்துரையாடலில் மாவட்டச் செயலர் தெரிவித்ததாவது:-

அவுஸ்திரேலியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக் கிழங்குகள் ஒருவகையான பாரதூரமான பக்றீரியாவால் பாதிக்கப்பட்டுள்ளன. பாதிப்புக் குறைவாக உள்ள உருளைக் கிழங்குகளைத் தெரிவு செய்து பயன்படுத்தினால் அது மண்ணுக்கும், ஏனைய பயிர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே இந்தக் கிழங்குகள் தொடர்பில் எடுக்கவேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது - என்றார். (ம-66)

# வெள்ளநீரால் பெரும் சிரமம்

பருத்தித்துறை, டிசெ. 19
பருத்தித்துறை, திருநாவலூர்ப் பகுதியில் உள்ள மேலைப்புலோலி பாடசாலை வீதியில் வெள்ளநீர் தேங்கி நிற்பதனால் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.



மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலயத்தின் வாயில் பகுதியின் இரு புறமுமாக வீதியை நிறைத்து வெள்ள நீர் தேங்கிவருகிறது. முன்பள்ளி மற்றும் சனசமூக நிலையம் என்பனவும் அங்கு இயங்கிவரும் நிலையில், நாளாந்தம் பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் இவ்வீதி யைப் பயன்படுத்தி வருகின்றனர்.


வீதி புனரமைப்பின்போது வெள்ளநீர் வடிந்தோடும் வகையில் சீரமைக்கப் படாமையால் தொடர்ந்தும் வெள்ளநீர் தேங்கி வருகிறது. இதனால் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பெருமளவானோர் அவதிக்குள்ளாகி வருகின்றனர். இது தொடர்பில் உரிய தரப்பினருக்குத் தெரியப்படுத்தப்பட்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என பிரதேச மக்கள் விசனம் தெரிவித்தனர். (ஓ-100)

## மருத்துவமனையில் தாவூத்

புதுடில்லி, டிசெ.19
இந்தியாவின் மும்பாய் குண்டு வெடிப்புச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரபல பாதாள உலகத் தலைவர் தாவூத் இப்ராகிம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனக் கூறப்படுகிறது.

அவரது உடல்நிலை மோசமடைந்து வருகின்றது என்று தகவல்கள் வெளியாகி வருகின்றன. கடுமையாக சுகவீனமுற்றுள்ள தாவூத், பாகிஸ்தானின் கராச்சியில் உள்ள மருத்துவமனையில் நேற்றுச் சேர்க்கப்பட்டுள்ளார்.

தாவூத் இப்ராகிமுக்கு விஷம் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், அவருக்கு விஷப்பரிசோதனை நடத்தப்பட்டது என்றும் வதந்திகள் பரவியுள்ளன. இது தொடர்பாக மருத்துவமனை தரப்பில் உத்தியோகபூர்வமாக விளக்கங்கள் எதுவும் வழங்கப்படவில்லை. எனினும் மேலும் இரண்டு நாள்கள் மருத்துவமனையில் தங்கிச் சிகிச்சை பெறுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)



## காட்டுத்தீ கார்பனால் கனடாவுக்குப் பாதிப்பு

ஒட்டாவா, டிசெ. 19
உலகளவில் காட்டுத்தீயால் அதிகளவு பாதிக்கப்பட்ட நாடாக கனடா அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், காட்டுத்தீயால் அதிகளவு கார்பனை வெளியிட்ட நாடாகவும் கனடாவே குறிப்பிடப்பட்டுள்ளது.

கனடாவில் காட்டுத்தீ காரணமாக இந்த ஆண்டில் 480 மெற்றிக்தொன் எடையுடைய கார்பன் வெளியிடப்பட்டுள்ளது. இதை 'மிகையதிகம்' என்று சூழலியல் ஆர்வலர்கள் கோடிட்டுக் காட்டியுள்ளனர்.

அத்துடன், காட்டுத்தீயால் வெளியான கார்பனில் 23 வீதமானது கனடாவில் இருந்து ஏற்பட்டுள்ளது என்றும் கண்டறியப்பட்டுள்ளது. (ம)

## செங்கடலுக்குப் பரவுகிறது காஸா - இஸ்ரேல் போர்!

புதுடில்லி, டிசெ.19
சூயெஸ் கால்வாய் வழியாகச் செல்வதைத் தவிர்க்கப்போவதாக மேலும் 2 பெரிய வணிகக் கப்பல் நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

ஏமனின் ஹௌதி கிளர்ச்சிக் குழு செங்கடலில் செல்லும் வணிகக் கப்பல்களைத் தாக்குவதால் அந்த நிறுவனங்கள் இந்த முடிவை அறிவித்துள்ளன.

காஸாவில் நடைபெறும் போருக்குப் பதிலடியாக அந்தப் பக்கமாகச் செல்லும் கப்பல்கள் தாக்கப்படும் என்று ஹௌதி கிளர்ச்சிக் குழு எச்சரித்திருக்கிறது.


சரக்குக் கப்பல்கள் மீது அதிகரித்திருக்கும் தாக்குதல்களால், கப்பல் நிறுவனங்களின் போர்க்காலக் காப்புறுதிச் சந்தாக் கட்டணங்கள் வெகுவாகக் கூடியிருக்கின்றன. (எ-இ)

## பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, டிசெ.19
நாடளாவிய ரீதியில் வனவிலங்கு அதிகாரிகள் நேற்று அடையாளப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

வனவிலங்கு அதிகாரிகளின் பாதுகாப்பை உறுதி செய்தல் உட்படப் பல கோரிக்கைகளை முன்வைத்து இந்த அடையாள வேலை நிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பணியின்போது 85 வன விலங்கு உத்தியோகத்தர்கள் உயிரிழந்துள்ளனர் என்றும், 23 பேர் காட்டு யானை தாக்கி உயிரிழந்துள்ளனர் என்றும் அகில இலங்கை வன விலங்கு அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் பிரபாஷ் கருணாதிலக தெரிவித்துள்ளார். (எ-இ)





இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய விநாயகர் சஷ்டி விரதத்தை முன்னிட்டான கஜமுகாசூர சங்கார உற்சவம் நேற்றுத் திங்கட்கிழமை மாலை கொட்டும் மழைக்கு மத்தியில் பல நூற்றுக்கணக்கான அடியவர்களின் பங்கேற்புடன் நடைபெற்றது. (ம-66)

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.